# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 277/2014 | Date : 03.04.2024 | PW3 |
|---|---|---|
| Name: பச்சமுத்து | S/o. **செல்லமுத்து** | |
| Evidence Recorded Time: 12.45 P.M. to 12.50 P.M | | |

9,10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

சாட்சி சொல்ல கோர்டில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. சாட்சி சொல்ல வாதி அழைத்தன் பேரில் வந்துள்ளேன். வாதி அரசாங்கத்திற்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் தெரியாது. பிரமான பத்திரிகையில் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். பொது அதிகாரப்பத்திரத்தில் நான் சாட்சி கையெபத்து போட்டுள்ளேன். எந்த தேதியில் போட்டேன் என்றால் 29.06.2012 ல் போட்டேன். எங்கு வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் ரவி பத்திரம் எழுதும் அலுவலகம் பின்பு சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன். பவர் ரத்து செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஒரு ஆவணமாக இருந்தாலும் இந்த பிரதிவாதிகளை பொறுத்து முறையாக சமர்பிக்கப்பட்டால் அதை பதிவு செய்வார்கள் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. 9,10 பிரதிவாதிகள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

ஒம்/–PW3

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.